

கலைஞர் 100 1924 - 2024

இன்றைய செய்தி நாளைய வரலாறு

# முரசொலி

Murasoli

www.murasoli.in

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 83 – ஒலி : 272 – திருவள்ளுவர் ஆண்டு 2056 – சித்திரை 30 – செவ்வாய்க்கிழமை 13 மே 2025 – சென்னை 16 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 83 - Issue 272 : Thiruvalluvar Year - 2056 - Chithirai 30 - Tuesday 13 May 2025 - Chennai 16 Pages ₹ 5.00


## மே 15-ஆம் தேதி

# உதகையில் 127-வது மலர்க் கண்காட்சி!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் தொடங்கி வைக்கிறார்!

**நீலகிரி, மே 13-**

**உதகையில் 127-வது மலர்க் கண்காட்சியை மே 15-ஆம் தேதி காலை 10.30 மணியளவில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் திறந்து வைக்கிறார்.**

இவ்விழாவில் மாவட்ட ஆட்சியர் லட்சுமி பன்யா தண்ணீரு வரவேற்கிறார். வ.தட்சிணா மூர்த்தி திட்ட விளக்க உரையாற்றுகிறார்.

விழாவிற்கு அமைச்சர் மு.பெ.சாமிநாதன் முன்னிலையும் அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் தலைமையும் வகிக்கின்றனர்.

இவ்விழாவில் அரசு கொறடா கா.ராமச்சந்திரன், ஆ.இராசா எம்.பி., ஆர்.கணேஷ் எம்.எல்.ஏ., பொன்.ஜெயசீலன் எம்.எல்.ஏ., மு.பொன்தோஸ், என்.எஸ்.நிஷா, எம்.வாணீஸ்வரி, எஸ்.கிருபா சங்கர், ஹெச்.ஆர்.கௌசிக் ஆகியோர் வாழ்த்துரை வழங்குகின்றனர். பெ.குமார வேல் பாண்டியன் நன்றி கூறுகிறார்.



நீலகிரிக்கு வரும் சுற்றுலா பயணிகளை கவரும் வகையில் தோட்டக்கலைத்துறை சார்பில், ஆண்டுதோறும் மே மாதம் கோடை விழா மற்றும் மலர் கண்காட்சி நடத்தப்பட்டு வருகிறது. இந்த ஆண்டு கோடை விழா கடந்த 3ந் தேதி கோத்தகிரியில் காய்கறி கண்காட்சியுடன் தொடங்கியது.

இதைத் தொடர்ந்து கூடலூரில் வாசனை திரவிய கண்காட்சி 3 நாட்கள் நடைபெற்றது. ஊட்டி ரோஜா பூங்காவில் நடைபெற்று வரும் ரோஜா கண்காட்சி நேற்று நிறைவடைந்தது. இதையடுத்து சர்வதேச அளவில் புகழ்பெற்ற ஊட்டி மலர் கண்காட்சி வருகிற 15-ந் தேதி தொடங்கி 11 நாட்கள் நடைபெற உள்ளது.

இந்த நிலையில் மலர்க் கண்காட்சியை தொடங்கி வைக்க முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் 5 நாட்கள் சுற்றுப்பயணமாக நேற்று ஊட்டிக்குச் சென்றார். அவர், நேற்று காலை விமானம் மூலம் கோவை சென்று, அங்கிருந்து சாலை மார்க்கமாக கார் மூலம் ஊட்டிக்குச் சென்றார்.

ஊட்டிக்கு வரும் வழியில் கோத்தகிரி, கட்டப்பெட்டு உள்ளிட்ட இடங்களில் கட்சியினர், பொதுமக்கள் வரவேற்பு அளித்தனர்.

இதைத்தொடர்ந்து முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஊட்டியில் பொதுமக்களுக்கு பட்டா வழங்கும் நிகழ்ச்சியில் கலந்து கொண்டு பழங்குடியின மக்களைச் சந்தித்து பேசுகிறார்.

மே 15ந் தேதி ஊட்டி அரசு தாவரவியல் பூங்காவில் 127-வது மலர்க் கண்காட்சியை தொடங்கி வைத்து, மலர் அலங்காரங்களை பார்வையிடுகிறார்.

இதையடுத்து 16-ந் தேதி 5 நாட்கள் சுற்றுப்பயணம் முடிந்து சென்னை திரும்புகிறார்.



தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று (12.5.2025) சென்னை தரமணியில் செயல்பட்டு வரும் செய்தி மக்கள் தொடர்புத் துறையின் தமிழரசு இதழ் அலுவலகத்தில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள கலைஞர் நூற்றாண்டு தோரணவாயிலை திறந்து வைத்தார். இந்நிகழ்வில் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ. சாமிநாதன், பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர்.பிரியா, சட்டமன்ற உறுப்பினர்கள் எஸ்.அரவிந்த் ரமேஷ், ஏ.எம்.வி.பிரபாகர ராஜா, க.கணபதி, ஜே.எம்.எச்.ஹசன் மௌலானா, தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை செயலாளர் வே. ராஜாராமன், செய்தி மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் மரு. இரா. வைத்திநாதன், கூடுதல் இயக்குநர் ச. செல்வராஜ், மாமன்ற உறுப்பினர்கள் உள்பட செய்தி மக்கள் தொடர்புத் துறை அலுவலர்கள் உடனிருந்தனர்.

## 2025—26ஆம் ஆண்டிற்காக

# ‘நமக்கு நாமே’ திட்டத்திற்கு ரூ.150 கோடி ஒதுக்கீடு!

## தமிழ்நாடு அரசு உத்தரவு!

*சென்னை, மே 13 -*

*நமக்கு நாமே திட்டத்திற்காக 2025-26ஆம் நிதியாண்டில், 150 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்துள்ள தமிழ்நாடு அரசு, அதற்கான வழிகாட்டு நெறிமுறைகளை வெளியிட்டு அரசாணை வெளியிட்டுள்ளது.*

*தமிழ்நாடு முழுவதும் பொதுமக்கள் மற்றும் தன்னார்வ அமைப்புகளின் பங்களிப்புடன் நமக்கு நாமே திட்டத்தின் கீழ் பல்வேறு திட்டப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இந்த நிலையில், 2025-26ஆம் நிதியாண்டில், நமக்கு நாமே திட்டத்திற்காக 150 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்து, நிர்வாக அனுமதியை தமிழ்நாடு அரசு வழங்கி உள்ளது. மேலும், வழிகாட்டு நெறிமுறைகளை வெளியிட்டு, அது தொடர்பான அரசாணையை வெளியிட்டுள்ளது.*

*அதில், நமக்கு நாமே திட்டத்தின் கீழ் ஊரகப் பகுதிகளில் மட்டுமே வளர்ச்சி திட்டப்பணிகளை மேற்கொள்ள வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. அரசுப் பள்ளிகள், ஆதிதிராவிடர் நலப் பள்ளிகள், அரசுக் கல்லூரிகள், உள்விளையாட்டு அரங்கம், சமுதாய நலக்கூடம் உள்ளிட்ட பணிகளை நமக்கு நாமே திட்டத்தின் கீழ் மேற்கொள்ளலாம் என்று தமிழ்நாடு அரசு தெரிவித்துள்ளது. உள்ளாட்சி அமைப்புகள் மற்றும் பல்கலைக்கழகங்கள் வழங்கும் பங்களிப்பு நிதி, இத்திட்டத்தின் கீழ் ஏற்றுக்கொள்ளப் படமாட்டாது என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.*

*நமக்கு நாமே திட்டத்தின் சிறப்பம்சங்கள் மற்றும் சாதனைப் பட்டியல் குறித்து, உள்ளூர் மக்கள் அறியும் வகையில் மாவட்ட ஆட்சியர் விளம்பரம் செய்ய வேண்டும் என்றும் அறிவுறுத்தப் பட்டுள்ளது.*

## சென்னை தரமணி ‘தமிழரசு’ இதழ் அலுவலக வளாகத்தில்

# முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு தோரண வாயில்!

## துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் திறந்து வைத்தார்!

**சென்னை, மே 13 -**

**துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று (12.05.2025) சென்னை, தரமணியில் உள்ள செய்தி மக்கள் தொடர்புத்துறையின் ‘தமிழரசு’ அலுவலகம் மற்றும் அச்சக வளாகத்தில், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு நினைவாக, ரூ.25 இலட்சம் செலவில் அமைக்கப் பட்டுள்ள “கலைஞர் நூற்றாண்டு தோரண வாயில்” மற்றும் “முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் மார்பளவுச் சிலை“ ஆகியவற்றை தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் முன்னிலையில் திறந்து வைத்தார்.**

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் 1970 ஆம் ஆண்டு தமிழ்நாடு அரசின், செய்தி மக்கள் தொடர்புத் துறையால் தொடங்கப்பட்ட ‘தமிழரசு’ இதழானது கடந்த 55 ஆண்டுகளாக, தமிழ்நாடு அரசின் மக்கள் நலத்திட்டங்களையும், சாதனைகளையும் தொகுத்து வழங்கி, அரசின் அச்சு ஊடகமாகத் தொடர்ந்து செயல்பட்டு வருகிறது. அனைத்து மக்களும் படித்துப் பயன்பெறும் வகையில், முதலமைச்சர் அவர்கள் பங்கேற்கும் அரசு விழாக்கள், கள ஆய்வுகள், அவை தொடர்பான செய்தி வெளியீடுகள், அரசின் நலத்திட்ட உதவிகளைப் பெறுவதற்கான வழிமுறைகள், பிற பொதுவான தகவல்கள் அடங்கிய மாத இதழாக ‘தமிழரசு’ இதழ் தொடர்ந்து வெற்றிகரமாக வெளிவந்து கொண்டிருக்கிறது.

மேலும், முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பல்வேறு நிகழ்ச்சிகளில் ஆற்றிய உரைகள், சட்டமன்ற உரைகள், சட்ட மன்றத்தில் விதி 110 இன் கீழ் அறிவித்த அறிவிப்புகள், முதலமைச்சர் அவர்களின் பொன்மொழிகள் போன்ற சிறப்பு வெளியீடுகளும், நாட்டு விடுதலைக்காகப் பாடுபட்ட பல்வேறு தலைவர்கள் மற்றும் தமிழ்ச் சான்றோர்களைப் போற்றும் விதமாகப் பல சிறப்பு மலர்களும் ‘தமிழரசு’ இதழ் வாயிலாக வெளியிடப்பட்டு வருகின்றன.

### 4 ஆண்டுகளில் 54 சிறப்பு வெளியீடுகள்!

கடந்த நான்காண்டுகளில் மட்டும் வெளியிடப்பட்டுள்ள 54 சிறப்பு வெளியீடுகளில் 19 சிறப்பு மலர்கள் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் திருக்கரங்களால் வெளியிடப்பட்டவை என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

தமிழரசு மாத இதழினை பொதுமக்கள், அரசு அலுவலகங்கள், அரசு நூலகங்களின் வாசகர்கள், அரசியல் கட்சிப் பிரமுகர்கள், தமிழ்ச் சான்றோர்கள் அதிக அளவில் படித்துப் பயன்பெறுகின்றனர். மேலும், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தால் நடத்தப்படும் போட்டித் தேர்வுகளுக்குத் தயாராகும் மாணவ, மாணவியர்கள் தமிழரசு அலுவலகத்திற்கு நேரடியாக வருகைதந்தும் இதழினை வாங்கியும் பயடைகின்றனர்.

### 1 லட்சம் சந்தாதாரர்கள்!

முந்தைய ஆட்சிக் காலங்களில் 30,000 ஆக இருந்த தமிழரசு மாத இதழ் சந்தாதாரர்களின் எண்ணிக்கை ஒரு இலட்சம் என்ற இலக்கினை அடைந்ததையொட்டி; அதனைச் சிறப்பிக்கும் வகையில் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் சென்னை கோட்டூர்புரம் அண்ணா நூற்றாண்டு நூலகத்தில் 17.5.2023 அன்று 1 இலட்சத்து 1 ஆவது சந்தாதாரருக்குத் தமிழரசு மாத இதழை வழங்கிப் பாராட்டினார்.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் தோற்றுவிக்கப்பட்டு, பல்வேறு பெருமைகள் கொண்டுள்ள ‘தமிழரசு’ இதழ் 55 ஆவது ஆண்டினை நிறைவு செய்யும் தருணத்தில், 6.6.2023 அன்று நடைபெற்ற செய்தி மக்கள் தொடர்புத்துறையின் மண்டல இணை இயக்குநர்களின் பணி ஆய்வுக் கூட்டத்தில் முதலமைச்சர் அவர்கள் ஆலோசனையின்படி, தரமணியிலுள்ள தமிழரசு அச்சக வளாகத்தில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு நினைவாக “கலைஞர் நூற்றாண்டு தோரணவாயில்” மற்றும் “முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் மார்பளவுச் சிலை” ஆகியவற்றை அமைத்திட முடிவு செய்யப்பட்டது.

### அமைச்சர் மு.பெ.சாமிநாதன் முன்னிலையில் திறந்து வைத்தார்!

அதன்படி, ரூ. 25 இலட்சம் செலவில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு நினைவாக அமைக்கப்பட்டுள்ள, “கலைஞர் நூற்றாண்டு தோரணவாயில்” மற்றும் “முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் மார்பளவுச் சிலை“ ஆகியவற்றை துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று (12.5.2025) தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் முன்னிலையில் திறந்து வைத்தார்.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால், தமிழரசு இதழ் துவங்கப்பட்ட காலந் தொட்டு, இதுநாள் வரையிலான தமிழரசு இதழின் வெற்றிப்பயணங்களின் புகைப்படங்கள் தொகுக்கப்பட்டு கண்காட்சிக்காக வைக்கப்பட்டிருந்தன.

மேலும், இந்தப் புகைப்படக் கண்காட்சியில் தமிழரசு இதழில் வெளியிடப்பட்ட, சிறப்பு வெளியீடுகளின் முகப்பு அட்டைகள், புகைப்படங்கள், முத்தமிழறிஞர் அவர்கள் எழுதிய வாழ்த்து மடல், கடிதங்கள் மற்றும் முதலமைச்சர் அவர்களால் வெளியிடப் பட்ட சிறப்பு மலர்களின் புகைப்படங்கள், முகப்பு அட்டைகள் ஆகியவைகளும் உள்ளடங்கி இருந்தன. இதனை தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்கள் பார்வையிட்டார்.

அதன்பிறகு, தமிழரசு அச்சகத்திற்கு சென்று, தமிழரசு இதழ் அச்சடிக்கும் பணிகளையும், அங்கு பொருத்தப்பட்டுள்ள இயந்திரங்களையும் பார்வையிட்டு, இயந்திரங்களின் செயல்பாடுகள் குறித்து கேட்டறிந்தார்.

இந்நிகழ்ச்சியில், பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர்.பிரியா அவர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள் எஸ்.அரவிந்த் ரமேஷ், ஏ.எம்.வி. பிரபாகர ராஜா, க.கணபதி, ஜே.எம்.எச்.ஹசன் மௌலானா, தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை செயலாளர் வே.ராஜாராமன், இயக்குநர், செய்தி மக்கள் தொடர்பு மற்றும் அரசு அலுவலால் அரசு இணைச் செயலாளர் மரு. இரா.வைத்திநாதன், கூடுதல் இயக்குநர் (செய்தி) எஸ். செல்வராஜ் அவர்கள், செய்தி மக்கள் தொடர்புத்துறை அரசு உயர் அலுவலர்கள், தமிழரசு அலுவலக (ம) அச்சக அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.